THE HINDU 01 FEB 2025

# Fixing of ballot sheets on EVMs completed in Erode

The process began on Wednesday and was completed on Friday; a total of 850 ballot units, 284 control units, and 308 VVPATs will be used across 237 polling stations in the constituency

The Hindu Bureau
ERODE

The process of fixing ballot sheets–containing the names, photos, and symbols of candidates–onto the ballot units for the byelection to the Erode (East) Assembly constituency has been completed.

The byelection is scheduled for February 5, with 46 candidates in the fray. Fixing the ballot sheets began on Wednesday and was completed on Friday. The None of the Above (NOTA) option is printed as the 47th choice on the ballot paper and appears on the third ballot unit.

A total of 850 ballot units (including a 20% reserve), 284 control units (20% reserve), and 308 voter-verifiable paper audit trails - VVPATs (30% reserve) will be used across 237 polling stations. During the process, Symbol Loading Units (SLUs) uploaded the names and details of the candidates onto the ballot units and into the VVPATs. Once the process was completed, the machines were placed in the strong room at the Corporation's Central Office and sealed. The strong room is under armed police guard, and the machines will be dispatched to polling stations on February 4.



Symbol Loading Units (SLUs) being kept in the strong room at the Collectorate and sealed in the presence of the District Election Officer and Collector Raja Gopal Sunkara in Erode on Friday.

Similarly, SLUs were stored in the strong room on the first floor of the Collectorate and sealed in the presence of District Election Officer and Collector Raja Gopal Sunkara, election officials, candidates, candidates' agents, and Bharat Electronics Limited (BEL) engineers on Friday. Election officials stated that, in accordance with new protocols mandated by the Supreme Court, all SLUs will be stored in a strong room for at least 45 days after the declaration of results. Polling will take place from 7 a.m. to 6 p.m. After voting concludes, all machines will be transported to the counting centre at the Government College of Engineering in Chithode and stored in strong rooms. The counting of votes will take place on February 8.

### Unaccounted cash

Election officials have so far seized ₹52.78 lakh in unaccounted cash and materials, of which ₹26.52 lakh was released after valid documents were produced as of Friday.

Seizure includes 84.28 litre of liquor worth ₹52,123, ganja and tablets worth ₹19,175 and sarees and garments, all worth ₹1 lakh. A total of 44 model code of violation cases were registered by police so far.

Scanned with OKEN Scanner

THE NEW INDIAN EXPRESS 0 1 FEB 2025




SAFEGUARDING THE EVMs

EVMs that will be used in the Erode East bypoll were placed in a strong room at the Erode Collectorate on Friday. District Election Officer Raja Gopal Sunkara locked the room in the presence of candidates' representatives | EXPRESS

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 01 FEB 2025

மேடை அமைக்க அனுமதி மறுப்பு

# ஈரோட்டில் நாம் தமிழர் கட்சியினர் சாலை மறியல்

ஈரோடு

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து அக்கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பிரச்சாரம் செய்து வருகிறார். சீமான் நேற்று பிரச்சாரம் மேற்கொள்ள திருநகர்காலனி பகுதியில் பொதுக்கூட்டம் மற்றும் மரப்பாலம் முனிசிபல் சத்திரம் பகுதியில் தெருமுனை கூட்டம் என இரண்டு இடங்களில் நாம் தமிழர் கட்சியினர் அனுமதி வேண்டி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் விண்ணப்பம் அளித்திருந்தனர். இதில், முனிசிபல் சத்திரம் பகுதியில் மட்டும் தெருமுனை கூட்டம் நடத்திக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

இந்நிலையில் தெருமுனை கூட்டத்துக்கு மேடை அமைக்க நாம் தமிழர் கட்சியினர் முற்பட்ட போது, போலீஸார் தடுத்து நிறுத்தி அனுமதி இல்லை என மறுத்ததால் நாம் தமிழர் கட்சியினர் கோபமடைந்து, தேர்தல் பறக்கும் படை வாகனத்தை வழிமறித்து மறியலில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாமல் மேடை அமைத்துக் கொள்ள காவல்துறை சார்பில் அனுமதி அளிக்கப்பட்டது. இதன் பின்னர் நாம் தமிழர் கட்சியினர் போராட்டத்தை கைவிட்டு மேடை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், சீமான் கலந்துகொள்ள இருந்த பொதுக்கூட்ட ஏற்பாடுகளை சட்டவிரோதமாகவும், தேர்தல் விதிகளுக்கு முரணாகவும் தடுத்த காவல்துறையினர் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, மாவட்ட தேர்தல் அலுவலரிடம் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

Permission declined to set up campaigning stage.
NTK party members indulged in road blocking strike.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 01 FEB 2025

# கலவரத்தை தூண்டும் வகையில் பேசியதாக சீமான் மீது 3 பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு

ஈரோடு

ஈரோட்டில் கலவரத்தை தூண்டும் வகையில் பேசியதாக, நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது மூன்று பிரிவுகளின் கீழ் கருங்கல்பாளையம் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமியை ஆதரித்து ஈரோடு நெரிக்கல்மேட்டில் கடந்த 28 –ம் தேதி இரவு பிரச்சார பொதுக்கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில், நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேசினார்.

இதுகுறித்து பெரியார் அம்பேத்கர் கூட்டமைப்பினர் அளித்த புகாரில், பிரச்சார பொதுக்கூட்டத்தில் சீமான் பேசியது கலவரத்தை தூண்டும் வகையில் உள்ளதாக தெரிவித்தனர். இந்நிலையில் சீமான் மீது கலவரத்தை தூண்டும் வகையில் பேசியது, பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பேசியது உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் கருங்கல்பாளையம் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

கடந்த 2023–ம் ஆண்டு ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலின் போது, அருந்ததியர் சமூக மக்கள் குறித்து சீமான் அவதூறாக பேசியதாக கருங்கல்பாளையம் காவல்நிலையத் தில் எஸ்சி–எஸ்டி பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**18 வழக்குகள் பதிவு**

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட பகுதியில், முன் அனுமதியின்றி கூட்டம் நடத்துதல், கூடுதல் நேரம் பிரச்சாரம் செய்தல், வாக்கு கேட்டு அனுமதி இல்லாமல் விளம்பர பதாகை வைத்தல் உள்ளிட்ட விதிமீறல்கள் தொடர்பாக நாம் தமிழர் மற்றும் திமுக உள்ளிட்ட அரசியல் கட்சியினர் மீது இதுவரை 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக, தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

A case filed under 3 sections on Seeman for speaking to incite riots.

Scanned with OKEN Scanner

**இந்து தமிழ்** 01 FEB 2025

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

# வாக்காளர் அல்லாதோர் 3-ம் தேதி மாலை வெளியேற வேண்டும்

**தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அறிவுறுத்தல்**

ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வெளியில் இருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் மற்றும் வாக்காளர்கள் அல்லாதோர், 3-ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும், என தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வரும் 5-ம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். இதையொட்டி, 3-ம் தேதி மாலை 6 மணி முதல், வாக்குப்பதிவு முடிவடையும் வரையில், பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் விவரம்: தேர்தல் தொடர்பான யாதொரு பொதுக் கூட்டத்தையோ, ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ கூடாது. தேர்தல் தொடர்பாக, திரைப்படம், தொலைக்காட்சி, எஃப்.எம். ரேடியோ, வாட்ஸ்அப், முகநூல், டிவிட்டர் சாதனங்கள் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு செல்லக் கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உட்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

அதேபோல், இசைநிகழ்ச்சி, திரையரங்க செயல்பாடு, கேளிக்கை அல்லது பொழுதுபோக்கு நிகழ்ச்சி மூலம் தேர்தல் பரப்புரை செய்யக்கூடாது. இந்த விதிமுறைகள் மீறப்பட்டால், 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

ஈரோடு கிழக்கு தொகுதிக்கு வெளியில் இருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் மற்றும் வாக்காளர்கள் அல்லாதோர், 3-ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் தொகுதியை விட்டு வெளியேற வேண்டும். திருமண மண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பது கண்காணிக்கப்படும். வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உட்பட வாகன அனுமதிகள், 3-ம் தேதி மாலை 6 மணிக்கு மேல் செயலற்றதாகி விடும்.

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் வாக்குப்பதிவு நாளன்று, வேட்பாளரின் சொந்த பயன்பாட்டுக்கான ஒரு வாகனம், தேர்தல் முகவரின் பயன்பாட்டுக்கான ஒரு வாகனம், தேர்தல் முகவர் அல்லது அவரது பணியாளர்கள் பயன்பாட்டுக்கான ஒரு வாகனத்துக்கு மட்டும் தேர்தல் நடத்தும் அதிகாரி அனுமதி வழங்குவார்.

வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வரவோ, அங்கிருந்து அழைத்து செல்லவோ, வேட்பாளரோ அவரது முகவரோ வாகனம் ஏற்பாடு செய்யக் கூடாது. இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட, வேட்பாளர்களின் அரசியல் கட்சிகளின் தற்காலிக பிரச்சார அலுவலகம் வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர் தொலைவுக்கு வெளியே அமைக்கப்படலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.


Erode East Assembly Constituency By-election.
Other than the voters should vacate Erode East Assembly area before 6 p.m on February 3.
Chief Election Commissioner orders.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 01 FEB 2025

கூட்டம் நடத்த அனுமதி மறுத்ததால்

## நாம் தமிழர் கட்சியினர் சாலை மறியல்



ஈரோடு, பிப்.1—

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் வேட்பாளர் சீதாலட்சுமி போட்டியிடுகிறார். இவரை ஆதரித்து ஈரோடு திருநகர் காலனி பகுதியில் வேட்பாளர் அறிமுக கூட்டம் நடத்தவும், தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் பேச அனுமதி கோரியும் விண்ணப்பித்தனர். இதைத்தொடர்ந்து தேர்தல் பிரிவு அதிகாரிகளின் வாய்மொழி உத்தரவுப்படி திருநகர் காலனியில் நாம் தமிழர் கட்சியினர் மேடை அமைக்க முயன்றனர். அப்போது கூட்டம் நடத்த அனுமதி வழங்கவில்லை எனக்கூறி போலீசார் தடுத்து, முனிசிபல் சத்திரம் பகுதியில் அனுமதி வழங்கினர்.

இதனால் நேற்று மாலை 5.40 மணிக்கு நாம் தமிழர் கட்சியினர் அந்த இடத்தில் மேடை அமைக்க முயன்றனர். அப்போது அங்கு வந்த போலீசார், 'இங்கும் அனுமதி இல்லை' என்றனர். இதனால் ஆத்திரம் அடைந்த நாம் தமிழர் கட்சியினர், வேட்பாளர் சீதாலட்சுமி தலைமையில் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். மேலும் கூட்டம் நடத்த அனுமதி கோரி கோஷங்களும் எழுப்பினர். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து நடந்த பேச்சுவார்த்தைக்கு பின்னர் கூட்டம் நடத்த போலீசார் அனுமதி வழங்கினர்.

இந்த சாலை மறியல் போராட்டத்தின் காரணமாக அந்த பகுதியில் சுமார் 20 நிமிடங்கள் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

Permission declined to conduct meeting.
NTK party members indulged in road blocking strike.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 01 FEB 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# விதிமுறைகளை மீறியதாக 18 வழக்குகள் பதிவு

ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடைபெறுகிறது. இதற்கான அறிவிப்பு கடந்த மாதம் 7-ந்தேதி வெளியானது. அன்று முதல் ஈரோடு கிழக்கு தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. பொது மக்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் பறக்கும் படை, நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடும் அரசியல் கட்சியினர் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறுகிறார்களா? எனவும் பறக்கும் படையினர் கண்காணித்து அளிக்கும் புகாரின்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்கின்றனர்.

அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கொடி கம்பங்கள், முன் அனுமதியின்றி கூட்டம் நடத்துபவர்கள், அனுமதிக்கப்பட்ட நேரத்தை விட கூடுதலாக பிரசாரம் செய்தவர்கள், வாக்கு கேட்டு விளம்பர பதாகைகளை வைத்து தேர்தல் விதிமுறைகளை மீறியதாக நாம் தமிழர் கட்சி மற்றும் தி.மு.க உள்ளிட்ட அரசியல் கட்சியினர் மீது இதுவரை 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
18 cases filed for the violation of ECC.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 01 FEB 2025

தேர்தல் பிரசாரத்துக்கு அனுமதி வழங்குவதில்

# போலீசார் ஒரு தலைபட்சமாக நடப்பதாக நாம் தமிழர் கட்சியினர் புகார்

ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாநகராட்சி ஆணையாளர் ஸ்ரீகாந்திடம், நாம் தமிழர் கட்சியின் முதன்மை முகவர் நவநீதன் மற்றும் நிர்வாகிகள் புகார் மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் நேற்று இரவு 7 மணி முதல் 10 மணி வரை திருநகர் காலனியில் பிரசார பொதுக்கூட்டம் நடத்த, வேட்பாளர் சீதாலட்சுமி, தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் ஆகியோருக்கு அனுமதி வழங்க கோரி விண்ணப்பித்து இருந்தோம். பொதுக்கூட்டத்துக்கு தேர்தல் நடத்தும் அலுவலர் அனுமதி வழங்குவதாகவும், மத்திய தொழில் பாதுகாப்பு படை போலீசார் பாதுகாப்பு வழங்குவதாகவும் உறுதியளித்து அனுமதி வழங்கினார்கள். மாலை 4 மணிக்கு அந்த இடத்தில் மேடை அமைக்கும் பணி நடந்தபோது, கருங்கல்பாளையம் போலீசார் வந்து, 'இங்கு கூட்டம் நடத்த அனுமதி இல்லை. மேடை அமைக்கக்கூடாது. கூட்டம் நடத்தினால் தி.மு.க.வினர் பிரச்சினை செய்வார்கள்' எனக்கூறி, கூட்டத்துக்கு அனுமதி இல்லை என வாய்மொழியாக கூறி மிரட்டினர்.

இந்த தேர்தலில் போலீசார் ஒரு தலைபட்சமாக நடந்து கொள்கின்றனர். எனவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

NTK party complains that the police shows partiality in granting permission for election campaign.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 01 FEB 2025



# வெறுப்பு அரசியல் பேசும் சீமான் மீது நடவடிக்கை

## தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் மனு

ஈரோடு, பிப்.1-

ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று திராவிட இயக்க தமிழர் பேரவை நிர்வாகிகள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தேர்தல் நடத்தும் அதிகாரியும், மாநகராட்சி ஆணையாளருமான ஸ்ரீகாந்தை சந்தித்து ஒரு புகார் மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தேர்தல் பரப்புரை மற்றும் பத்திரிகையாளர் சந்திப்புகளில் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தொடர்ந்து பொய்யான அவதூறுகளை வன்முறையை விதைக்கும் பிரிவினைவாத வெறுப்பு அரசியலை பேசுவதை வாடிக்கையாக கொண்டுள்ளார்.

தமிழ்நாட்டின் சமூக அரசியல் வரலாற்றின் தந்தையாக, பெண்கள், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் விடுதலை குரலாக செயல்பட்ட மாபெரும் சமூக சீர்திருத்த தலைவர் பெரியார் குறித்து பொதுவெளியில் உண்மைக்கு புறம்பான அவதூறுகள் பரப்பி வருகிறார். இதையே முதன்மை பிரசாரமாகவும் செய்து வருகிறார்.

மேலும் கடந்த 28-ந் தேதி அசோகபுரம் நரிக்கல்மேடு பகுதியில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத்தில் எதிர்க்கட்சியினரை . பார்த்து வெடிகுண்டு வீசுவேன், உங்களை புதைக்கிற இடத்தில் புல் கூட முளைக்காது என்று பேசியிருக்கிறார். இது சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது. தேர்தல் நேரத்தில் அசம்பாவிதங்கள், சட்டம் ஒழுங்கு சீர்குலைவு வேலைகளில் ஈடுபடுவதற்கு தனது தொண்டர்களை தூண்டும் வகையில் சீமான் பேசி இருப்பதாக கவலைப்படுகிறோம். எனவே தேர்தல் நடத்தை விதிகளுக்கும், சட்டம் ஒழுங்குக்கும் எதிராக் தொடர்ந்து பேசி வரும் சீமான் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Demand to take action on Seeman for his controversial political speech.
Petition given to The Returning Officer.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 01 FEB 2025

'தலைவர் தந்த வெடிகுண்டு என்னிடம் உள்ளது'

# தேர்தல் பிரசாரத்தில் பேசிய சீமான் மீது வழக்கு

ஈரோடு, பிப்.1-

'தலைவர் தந்த வெடிகுண்டு என்னிடம் உள்ளது' என்று ஈரோடு இடைத்தேர்தல் பிரசாரத்தில் பேசிய சீமான் மீது போலீசார் வழக்குப் பதிவு செய்தனர்.

## சீமான் பிரசாரம்

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இதை முன்னிட்டு தேர்தல் பிரசாரம் தீவிரமாக நடந்து வருகிறது. இந்த தேர்தலில் நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை ஆதரித்து கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தொடர் பிரசாரம் செய்து வருகிறார். இதற்காக ஈரோட்டிலேயே முகாமிட்டுள்ள அவர் தினமும் மாலை நேரங்களில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் பேசுகிறார்.

அதன்படி கடந்த 28-ந்தேதி அன்று ஈரோடு அசோகபுரம் நெரிக்கல்மேடு பகுதியில் தேர்தல் பிரசார பொதுக்கூட்டம் நடந்தது. அதில் நாம் தமிழர் கட்சி வேட்பாளருக்கு வாக்கு கேட்டு சீமான் பேசினார்.

## வெடிகுண்டு

அவர் பேசும்போது பெரியார் குறித்து சர்ச்சைக்குரிய அவதூறு கருத்துகளையும் கூறியதாக தெரிகிறது. அது மட்டுமின்றி பெரியாரிடம் உள்ளது வெறும் வெங்காயம் தான். அந்த வெங்காயத்தை என்மீது வீசினால் ஒன்றும் ஆகாது.

ஆனால் என் தலைவன் கொடுத்த வெடிகுண்டு என்னிடம் உள்ளது. அதை நான் உங்கள் மீது வீசினால் உங்களை புதைத்த இடத்தில் ஒரு புல்லுகூட முளைக்காது. ஜாக்கிரதையாக இருந்துகொள்ளுங்கள் என்று பேசியதாக தெரிகிறது.

## வழக்குப்பதிவு

இது பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் உள்ளதாகவும், சீமான் தன்னிடம் வெடிகுண்டு இருப்பதாக இந்த கூட்டத்தில் கூறி இருப்பதால் அவரிடம் உள்ள வெடிகுண்டுகளை கைப்பற்ற வேண்டும். பொதுமக்கள் மத்தியில் வெடிகுண்டு வீசுவேன் என்று கூறிய அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். மக்களை அச்சுறுத்தும் வகையில் பிரசாரம் செய்யும் சீமானை தொடர்ந்து பிரசாரம் செய்ய அனுமதிக்கக்கூடாது என்று ஈரோடு தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சி, திராவிட இயக்க தமிழர் பேரவை மற்றும் பல்வேறு அமைப்புகள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் புகார் தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஈரோடு கருங்கல்பாளையம் போலீசார் நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் மீது 3 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளனர். ஏற்கனவே அவர் மீது 4 வழக்குகள் உள்ள நிலையில் நேற்று போடப்பட்ட வழக்குடன் மொத்தம் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

A case filed on Seeman for declaring that he has a bomb given by his leader.

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 01 FEB 2025

தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த

# ரூ.26½ லட்சம் உரியவர்களிடம் ஒப்படைப்பு

ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 5-ந்தேதி நடைபெற உள்ளது. இதை முன்னிட்டு கடந்த மாதம் 7-ந்தேதி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. இதனால் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில், 3 பறக்கும் படை மற்றும் 3 நிலை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் கிழக்கு தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு, அப்போது ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொண்டு வந்தால் அவற்றை பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை உரிய ஆவணங்களின்றி 60 பேர் எடுத்து வரப்பட்ட ரூ.52 லட்சத்து 78 ஆயிரத்து 60-ஐ தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்துள்ளனர். இதில் 16 பேர் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்ததால் அவர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ரூ.26 லட்சத்து 52 ஆயிரத்து 560 திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது. 44 பேரிடம் பறிமுதல் செய்யப்பட்ட மீதமுள்ள ரூ.26 லட்சத்து 25 ஆயிரத்து 500 மாவட்ட கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

The seized amount of Rs.26.5 Lakhs by the flying squad returned to the concerned parties

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 01 FEB 2025

வாக்குச்சாவடி மண்டல அலுவலர்களின்

# வாகனங்களில் ஜி.பி.எஸ். கருவி பொருத்தம்



ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற 5-ந்தேதி நடக்கிறது. இந்த தொகுதியில் உள்ள பொதுமக்கள் வாக்களிக்க வசதியாக 237 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டு உள்ளன. இந்த வாக்குச்சாவடியை கண்காணிக்க 24 மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் வாக்குச்சாவடிக்கு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் கொண்டு வருவது, வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவை கண்காணிப்பது, வாக்குப்பதிவு நிறைவடைந்ததும் வாக்குப்பெட்டிகளை முறையாக சீல் வைத்து, வர்க்கு எண்ணிக்கை மையத்துக்கு பாதுகாப்பாக கொண்டு செல்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.

- மண்டல அலுவலர்கள் தலைமையில் வாக்குச்சாவடிக்கு மேற்கூரையுடன் கூடிய லாரி போன்ற வாகனங்களில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் கொண்டு செல்லப்படும். இந்தநிலையில், மண்டல அலுவலர்களுக்காக மாநகராட்சி அலுவலக வளாகத்தில் 24 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த வாகனங்களில் தேர்தல் ஆணைய உத்தரவுப்படி நேற்று மாலை ஜி.பி.எஸ். கருவி பொருத்தும் பணி தொடங்கியது. இந்த கருவி மூலம் மண்டல அலுவலர்கள் வாகனங்கள் எங்கு செல்கின்றன என்பதை, தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

GPS fixed in the vehicles allotted to the zonal officer.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 01 FEB 2025

3-ந்தேதி மாலை 6 மணிக்கு மேல்

# ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்காளர்கள் அல்லாதோர் வெளியேற வேண்டும்

## தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி உத்தரவு

சென்னை, பிப்.1- ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்காளர்கள் அல்லாதோர் 3-ந்தேதி மாலை 6 மணிக்கு மேல் அந்த தொகுதியை விட்டு வெளியேற வேண்டும் என்று தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்து உள்ளார்.

### விதிமுறைகள்

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது:-

ஈரோடு கிழக்கு சட்டசபை தொகுதியின் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 5-ந்தேதி நடக்கிறது. வாக்குப்பதிவு அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். எனவே 3-ந்தேதி மாலை 6 மணி முதல் வாக்குப்பதிவு முடிவடையும் வரையில் 1951-ம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டப்பிரிவு 126-ன் கீழ், பின்வரும் விதிமுறைகள் செயலில் இருக்கும்.

தேர்தல் தொடர்பான எந்தவொரு பொதுக் கூட்டத்தையோ ஊர்வலத்தையோ யாரும் ஒருங்கிணைக்கவோ, நடத்தவோ அல்லது அதில் பங்கேற்கவோ கூடாது. எந்தவொரு தேர்தல் விவகாரத்தையும், திரைப்படம், தொலைக்காட்சி, எப்.எம். ரேடியோ, வாட்ஸ்அப், முகநூல், டுவிட்டர் போன்ற அல்லது இதுபோன்ற சாதனம் வாயிலாகப் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கக்கூடாது. குறுஞ்செய்தி மற்றும் இணையம் உள்பட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்பையும் இது உள்ளடக்கும்.

### தண்டனை

பொது மக்களில் எந்தவொரு நபரையும் ஈர்க்கிற வகையில், இசை நிகழ்ச்சி, திரையரங்கச் செயல்பாடு, பிற கேளிக்கை, பொழுது போக்கு நிகழ்ச்சியை நடத்த கூடாது. எந்த வகையிலும் பொதுமக்களிடம் பரப்புரை செய்யக் கூடாது. இதை மீறினால், 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.

தொகுதி வெளியிலிருந்து அழைத்து வரப்பட்ட அனைத்து அரசியல் கட்சி நிர்வாகிகள், கட்சிப் பணியாளர்கள் முதலியோர் மற்றும் அத்தொகுதியின் வாக்காளர்கள் அல்லாதோர் 3-ந்தேதி மாலை 6 மணிக்கு மேல் அந்த தொகுதியை விட்டு வெளியேற வேண்டும். கல்யாண மண்டபம், சமுதாயக்கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பது கண்டறியப்படும்.

### அனுமதிக்கக்கூடாது

வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உள்பட வாகன அனுமதிகள், 3-ந்தேதி மாலை 6 மணி முதல் செயல் திறனற்றதாகிவிடும். சட்டசபை தேர்தலுக்கான ஒவ்வொரு வேட்பாளருக்கும் வாக்குப்பதிவு நாளன்று வாகன அனுமதி விதிகளின்படி, அவரது சொந்த பயன்பாட்டிற்கான ஒரு வாகனம், தேர்தல் முகவரின் பயன்பாட்டிற்கான சட்டசபை தொகுதிக்கு ஒரு வாகனம் மற்றும் தேர்தல் முகவர் அல்லது அவரது பணியாளர்கள் பயன்பாட்டிற்கான ஒரு வாகனம் உள்ளிட்ட வாகனங்களின் அனுமதி தேர்தல் நடத்தும் அதிகாரியால் வழங்கப்படும்.

வாக்காளர்களை வாக்குச்சாவடிக்கு அழைத்து வருவதற்கும், வாக்குச்சாவடிகளில் இருந்து அழைத்து செல்வதற்கும் வேட்பாளர் அல்லது அவரது முகவர் வாகனத்தை வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது வாங்குவதற்கு, பயன்படுத்துவதற்கு எந்தவொரு வேட்பாளரும் அனுமதிக்கக் கூடாது. இது தண்டிக்கப்பட வேண்டிய முறைகேடான செயலாகும்.

இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட, வேட்பாளர்களின் அரசியல் கட்சிகளின் தற்காலிக அலுவலகம் வாக்குச்சாவடியிலிருந்து 200 மீட்டர்கள் தொலைவிற்கு வெளியே அமைக்கப்படலாம். தேவையில்லாத கூட்டத்தை அவர்கள் அனுமதிக்க கூடாது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
Other than the voters should vacate Erode East Assembly area before 6 p.m on February 3.
Chief Election Commissioner orders.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 01 FEB 2025

# பறக்கும் படை சோதனையை தேர்தல் நடத்தும் அதிகாரி ஆய்வு

ஈரோடு, பிப்.1–

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு கடந்த மாதம் 7–ந்தேதி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் உள்ளது. இதனால் ரூ.50 ஆயிரத்து மேல் உரிய ஆவணங்களின்றி பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொண்டுவந்தால் அவற்றை தேர்தல் பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர். மேலும் மது உள்ளிட்ட போதை பொருட்கள், சேலைகள் உள்ளிட்ட ஆடைகள், வீட்டு உபயோக பொருட்கள் என எடுத்துவரப்படும் அனைத்து வகை பொருட்களும் உரிய ஆவணங்களின் அடிப்படையிலேயே எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுகின்றன. தகுந்த ஆவணங்களில்லாத பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் நிலை கண்காணிப்பு குழுவினர், ஈரோடு கிழக்கு தொகுதிக்குள் மேற்கொண்டு வரும் பணிகளை கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியும், மாநகராட்சி ஆணையாளருமான ஸ்ரீகாந்த் நேற்று பார்வையிட்டார். அதன்படி, அவர் ஈரோடு கருங்கல்பாளையம் சோதனைச்சாவடி பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்டு வரும் வாகன தணிக்கைப் பணிகளை ஆய்வு செய்தார். அப்போது உரிய விதிமுறைகளின்படி செயல்பட அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது தேர்தல் கட்டுப்பாட்டு அதிகாரி ஆனந்த் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Returning Officer inspects the flying squad checking.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 01 FEB 2025

கலெக்டர் முன்னிலையில்

## சின்னம் பொருத்தும் கருவி பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டது

ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் பேலட் சீட் பொருத்தும் பணிகள் நிறைவடைந்து உள்ளன. விவிபேட் கருவியில் யாருக்கு வாக்களித்தோம் என்பதை உறுதி செய்யும் சின்னத்தை காட்டும் வகையில் மென்பொருள் பதிவேற்றம் செய்யும் பணியும் நிறைவடைந்து உள்ளது.

இதைத்தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் சின்னம் பொருத்தும் கருவி கலெக்டர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஈரோடு மாவட்ட கலெக்டரும், மாவட்ட தேர்தல் அதிகாரியுமான ராஜகோபால் சுன்கரா முன்னிலையில் சின்னம் பொருத்தும் கருவி வைக்கப்பட்ட அறைக்கு சீல் வைக்கப்பட்டது. கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முகமது குதுரத்துல்லா, தேர்தல் பிரிவு தாசில்தார் சிவசங்கர் ஆகியோர் உடன் இருந்தனர். இதையடுத்து அந்த அறைக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

The machine for fixing the symbol in the EVMs kept in the strong room in the Presence of The Election Officer/Erode District Collector.

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 01 FEB 2025

ஈரோட்டில்

## வாக்குச்சாவடி நுண் பார்வையாளர்களுக்கு பயிற்சி

ஈரோடு, பிப்.1–

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக 237 வாக்குச்சாவடிகளை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள 284 தேர்தல் நுண் பார்வையாளர்களுக்கான பயிற்சி கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா தலைமை தாங்கினார். பொதுத்தேர்தல் பார்வையாளர் அஜய்குமார் குப்தா முன்னிலை வகித்தார். வாக்குச்சாவடியில் வருகிற 5–ந்தேதி வாக்குப்பதிவுக்கு முன்பு செய்ய வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும், விதிமீறல்கள் நடைபெறும் பட்சத்தில் தேர்தல் பொது பார்வையாளருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது பற்றியும் பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் வருகிற 8–ந்தேதி, அந்த பணியில் ஈடுபட உள்ள 17 கண்காணிப்பாளர்கள், 17 உதவியாளர்கள், 17 நுண் பார்வையாளர்கள் என 51 அலுவலர்களுக்கு வாக்கு எண்ணிக்கை தினத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து கலெக்டர் தலைமையில் பயிற்சி வழங்கப்பட்டது. கூட்டத்தில், ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த், உதவி கலெக்டர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, உதவி திட்ட அலுவலர் மகேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Training for the Micro Observers.

Scanned with OKEN Scanner

தினமலர்

01 FEB 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் விதிகளை மீறியதாக 18 வழக்குப்பதிவு

ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற பிப்ரவரி 5ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான அறிவிப்பு கடந்த 7ம் தேதி வெளியானது.

இதையடுத்து உடனடியாக ஈரோடு கிழக்கு தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது. பொதுமக்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுப்பதை தடுக்கும் வகையில் பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுவினர் அமைக்கப்பட்டு 24 மணி நேரமும் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடும் அரசியல் கட்சியினர் நடத்தை விதிகளை மீறுகின்றனரா என பறக்கும் படையினர் கண்காணித்து அளிக்கும் புகாரின்பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்கின்றனர்.

இந்த வகையில் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கொடி கம்பங்கள், முன் அனுமதியின்றி கூட்டம் நடத்துபவர்கள், அனுமதிக்கப்பட்ட நேரத்தை விட கூடுதலாக பிரச்சாரம் செய்தவர்கள், வாக்கு கேட்டு விளம்பர பதாகைகளை வைத்து விதி மீறியதாக நாம் தமிழர் கட்சி மற்றும் தி.மு.க உள்ளியிட்ட அரசியல் கட்சியினர் மீது இதுவரை 18 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
18 cases filed for the violation of ECC.

Scanned with OKEN Scanner

**தினமலர்** 01 FEB 2025

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்

## 5ம் தேதி தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் லீவு விட சுகாதார இணை இயக்குநர் அறிவுரை

ஈரோடு, பிப்.1-

ஈரோடு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் வினோத்குமார் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிப்.5ம்தேதி நடைபெறுகிறது. இதையொட்டி ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமானங்களில் பணியாற்றும் ஈரோடு கிழக்கு தொகுதியில் ஓட்டுரிமை உள்ள அனைத்து தொழிலாளர்களும் வாக்களிக்கும் பொருட்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் மற்றும் மாற்றுமுறை ஆவணங்கள் சட்டத்தின்படி தேர்தல் நாளன்று சம்பளத்துடன் கூடிய விடுப்பு தவறாமல் வழங்குமாறு தொழிற்சாலைகள் நிர்வாகத்தினர் மற்றும் கட்டுமான உரிமையாளர், நிர்வாகத்தினர் அனைவருக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும் இது தொடர்பான தொழிலாளர்களின் புகார்களுக்கு கீழ்க்கண்ட கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்களை தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தொலைபேசி எண்கள்: 0424-2219521, 0424-2211780, 99943 80605, 98650 72749.

இந்த தகவலை ஈரோடு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர் வினோத்குமார் தெரிவித்துள்ளார்.

Erode East Assembly Constituency By-election.
Joint Director of Medical Services advised to declare holiday with salary for workers.

Scanned with OKEN Scanner

தினமலர் 01 FEB 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் 1,113 வாக்காளர்கள் சேர்ப்பு

ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்கு தொகுதியில் புதிதாக, 1,113 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 8 சட்டசபை தொகுதிக்கு, கடந்த 6ம்தேதி இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. அப்போது ஈரோடு கிழக்கு தொகுதியில், 1 லட்சத்து, 9,636 ஆண் வாக்காளர், 1 லட்சத்து, 16,760 பெண் வாக்காளர்கள், 3ம் பாலினத்தவர்கள் 37 என மொத்தம் 2 லட்சத்து, 26,433 வாக்காளர்கள் உள்ளதாக அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில் கடந்த, 7 ம் தேதி ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அன்றைய தேதி வரை புதிதாக வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க வழங்கப்பட்ட விண்ணப்பத்தின் பேரில், 1,113 புதிய வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

அதன்படி ஈரோடு கிழக்கு தொகுதியில், 1 லட்சத்து, 10,128 ஆண், 1 லட்சத்து, 17,381 பெண், 3ம் பாலினத்தவர்கள், 37 பேர் என, 2 லட்சத்து, 27,546 வாக்காளர்கள் தற்போது உள்ளதாக ஈரோடு மாவட்ட தேர்தல் பிரிவு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

Erode East Assembly Constituency By-election.
1,113 new voters included.

Scanned with OKEN Scanner

தினமலர்
01 FEB 2025

## ஈரோடு கிழக்கு தொகுதியில்

# 1.76 லட்சம் வாக்காளர்களுக்கு பூத் சிலிப் விநியோகம்

ஈரோடு, பிப். 1-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் வருகிற 5ம் தேதி நடைபெறுகிறது. இதற்காக 53 இடங்களில் 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. தேர்தலில் 100 சதவீதம் வாக்குப் பதிவை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. ஈரோடு கிழக்கு தொகுதியில் மொத்தம் 2 லட்சத்து 27 ஆயிரத்து 546 வாக்காளர்கள் உள்ளனர்.

இவர்களுக்கு வீடு வீடாக சென்று பூத்சிலிப் வழங்கும் பணி கடந்த 26ம் தேதி தொடங்கி நடந்து வருகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்த பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 26ம் தேதி 40 ஆயிரத்து 429 வாக்காளர்களுக்கும், 27ம் தேதி 34 ஆயிரத்து 859 வாக்காளர்களுக்கும், 28ம் தேதி 32 ஆயிரத்து 79 வாக்காளர்களுக்கும், 29ம் தேதி 37 ஆயிரத்து 146 வாக்காளர்களுக்கும், நேற்று முன்தினம் 31 ஆயிரத்து 539 வாக்காளர்களுக்கும் பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது.


மொத்தம் இதுவரை 1 லட்சத்து 76 ஆயிரத்து 52 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள வாக்காளர்களுக்கு விரைவில் கொடுத்து முடிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

Erode East Assembly Constituency By-election.
Booth slips distributed to 1.76 Lakhs voters.

Scanned with OKEN Scanner

தினமலர்

0 1 FEB 2025



ஈரோடு கருங்கல்பாளையத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக சோதனை சாவடியில் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த் ஆய்வு நடத்தினார்.

Erode East Assembly Constituency By-election.
The Election Returning Officer inspects the flying squad checking near Karungal Palayam.

Scanned with OKEN Scanner

தினமலர் 01 FEB 2025



ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு ஓட்டுப்பதிவு மிஷினில் சின்னம் பொருத்தும் கருவியை கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள இருப்பறையில் வைத்து ஈரோடு தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா சீலிட்டார்.

# ஓட்டுப்பதிவு மிஷினில் சின்னம் பொருத்தும் கருவி பாதுகாப்பு இருப்பறையில் வைத்து சீல்

ஈரோடு, பிப்.1-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தல் 5ம் தேதி நடைபெறுகிறது. தேர்தல் கமிஷன் உத்தரவின்படி இதற்கான முன்னேற்பாடு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷினில் சின்னம் பொருத்தும் கருவியை வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா கலெக்டர் அலுவலக முதல் தளத்தில் உள்ள பாதுகாப்பு இருப்பறையில் வைத்து சீலிட்டார்.

ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப்பதிவிற்காக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். எனவே ரிசர்வ் சேர்த்து 850 எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு யூனிட், 284 கட்டுப்பாட்டு யூனிட் மற்றும் 308 வி.வி.பேட் ஒதுக்கீடு செய்யப்பட்டு கடந்த 29 முதல் 30ம் தேதி வரை எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷினில் சின்னம் பொருத்தும் பணி நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்று (31ம் தேதி) ஈரோடு தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா, ஈரோடு கலெக்டர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு இருப்பறையில் எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷினில் சின்னம் பொருத்தும் கருவி வைக்கப்பட்ட பெட்டியினை வைத்து சீலிட்டார். இந்த இருப்பறையை 24 மணி நேரமும் ஆயுதம் ஏந்திய போலீசார் தொடர்ந்து கண்காணிப்பர்.

நிகழ்ச்சியின்போது கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முகமது குதுரரத்துல்லா, தாசில்தார் (தேர்தல்) சிவசங்கர் உட்பட தொடர்புடைய அலுவலர்கள் வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் பெல் நிறுவன இன்ஜினியர் ஆகியோர் உடனிருந்தனர்.

The machine for fixing the symbol in the EVMs kept in the strong room and sealed in the Presence of The Election Officer/Erode District Collector.

Scanned with OKEN Scanner

**தினகரன்** 01 FEB 2025

### தேர்தல் நடத்தை விதிகளை மீறி பேசும்

## சீமான் மீது நடவடிக்கை எடுக்க மாநகராட்சி ஆணையரிடம் மனு

ஈரோடு,பிப்.1: தேர்தல் நடத்தை விதிகளை மீறி பேசும் சீமான் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி திராவிடர் இயக்க தமிழர் பேரவை ஈரோடு மாநகராட்சி ஆணையரிடம் மனு அளித்தனர்.

திராவிட இயக்க தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்திடம் அளித்த புகார் மனுவில் தெரிவித்துள்ளதாவது: ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத் தேர்தல் பரப்புரைகளிலும், பத்திரிகையாளர் சந்திப்புகளிலும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், தொடர்ந்து பொய்யான அவதூறுகளையும், வன்முறையை விதைக்கும் பிரிவினைவாத வெறுப்பு அரசியலையும் பேசுவதையே வாடிக்கையாக கொண்டு பேசி வருகிறார்.

தமிழ்நாட்டின் சமூக அரசியல் வரலாற்றின் தந்தையாகவும், பெண்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தின் விடுதலை குரலாக செயல்பட்ட மாபெரும் சமூக சீர்திருத்த தலைவர் பெரியாரை பற்றி பொதுவெளியில் உண்மை புறம்பான அவதூறுகளை பரப்பி வருகிறார். கடந்த 28ம் தேதி அசோகபுரம் நெரிக்கல்மேடு பகுதியில் நாம் தமிழர் கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசிய சீமான், எதிர்கட்சியினரை பார்த்து 'வெடிகுண்டு வீசி விடுவேன், உங்களை புதைக்கிற இடத்தில் புல் கூட முளைக்காது' என பேசியுள்ளார்.

இது அனைத்து சமூக வலைத்தளங்களிலும் பரவி வருகிறது. இதனால், தேர்தல் நேரத்தில் அசம்பாவிதங்களோ, சட்டம் ஒழுங்கு சீர்குலைவு வேலைகளிலோ ஈடுபடுவதற்கு தனது தொண்டர்களை தூண்டும் வகையில் சீமான் பேசியிருப்பதாக நாங்கள் கவலைப்படுகிறோம். எனவே, இதனை விசாரித்து, தேர்தல் நடத்தை விதிகளுக்கும், சட்டம் ஒழுங்கிற்கு எதிராக தொடர்ந்து பேசி வரும் சீமான் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறியிருந்தனர். இந்நிகழ்வின்போது, துணை பொதுச்செயலாளர் நாகராஜன், மாநகர் மாவட்ட செயலாளர் தமிழ் குமரன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

Petition given to The Returning Officer/Erode Corporation Commissioner to take action against Seeman who keeps on speaking in a manner of violating ECC.

Scanned with OKEN Scanner

தினகரன் 01 FEB 2025

## தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்த தொகைகளில் ரூ.26.52 லட்சம் விடுவிப்பு

ஈரோடு,பிப்.1: ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5ம் தேதி நடைபெறவுள்ளது. முன்னதாக தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாள் முதல் ஈரோடு கிழக்குத் தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன. அதன்படி, வாக்காளர்களுக்கு பரிசுப் பொருட்கள், பணம் உள்ளிட்டவைகளை கொடுப்பதை தடுக்கும் வகையில், பறக்கும் படை அலுவலர்கள் குழு மற்றும் கண்காணிப்பு நிலைக் குழுவினர் 30 பேர் தீவிர வாகனத் தணிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி, உரிய ஆவணங்களின்றி ரூ.50 ஆயிரத்துக்கும் மேலாக எடுத்துச்செல்லப்படும் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு, தேர்தல் கட்டுப்பாடு பிரிவு மூலமாக மாவட்ட கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளன.

தற்போது வரை உரிய ஆவணங்களின்றி எடுத்து வரப்பட்டதாக மொத்தம் 60 பேரிடமிருந்து ரூ.52 லட்சத்து 78 ஆயிரத்து 60ஐ தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்திருந்தனர். அதில், உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து 16 பேருக்குச் சொந்தமான ரூ.26 லட்சத்து 52 ஆயிரத்து 560 விடுவிக்கப்பட்டு, உரியவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 44 பேருக்குச் சொந்தமான ரூ.26 லட்சத்து 25 ஆயிரத்து 500 மாவட்டக் கருவூலத்தில் வைக்கப்பட்டுள்ளது.

The seized amount of Rs.26.52 Lakhs by the flying squad returned to the concerned parties.

Scanned with OKEN Scanner

தினகரன் 0 1 FEB 2025

# வாக்குச்சாவடி மண்டல அலுவலர்களுக்கான வாகனங்களுக்கு ஜிபிஎஸ் கருவி பொருத்தம்

ஈரோடு,பிப்.1: ஈரோடு இடைத்தேர்தலில் வாக்குச்சாவடி மண்டல அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களின் வாகனங்களுக்கு ஜிபிஎஸ் கருவி நேற்று பொருத்தப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற 5ம் தேதி (புதன்கிழமை) நடைபெற உள்ளது. மக்கள் வாக்களிக்க ஏதுவாக அமைக்கப்பட்ட 237 வாக்குச்சாவடிகளிலும் கண்காணிக்க 24 மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் வாக்குச்சாவடிக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுமதிக்கப்பட்ட வழித்தடத்தில் கொண்டு வருவது, வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவினை கண்காணிப்பது,வாக்குப்பதிவு நிறைவடைந்ததும் வாக்குப்பெட்டிகளை முறையாக சீல் வைத்து, வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு பாதுகாப்பாக கொண்டு செல்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ள உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி வளாகத்தில் வாக்குச்சாவடிகளுக்கு செல்லும் 24 வாகனங்களுக்கு ஜிபிஎஸ் கருவி பொருத்தும் பணி நேற்று நடந்தது.

மண்டல அலுவலர்கள் தலைமையில் தான் வாக்குச்சாவடிக்கு மேற்கூரையுடன் கூடிய லாரி போன்ற வாகனங்களில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் கொண்டு செல்லப்படும். இந்நிலையில், மண்டல அலுவலர்களுக்காக மாநகராட்சி அலுவலக வ்ளாகத்தில் 24 வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த வாகனங்கள் தேர்தல் ஆணைய உத்தரவுப்படி நேற்று மாலை ஜிபிஎஸ் கருவி பொருத்தும் பணி நடந்தது. இந்த கருவி மூலம் மண்டல அலுவலர்கள் வாகனங்கள் எங்கு செல்கின்றன என்பதை, தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்கப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

GPS fixed in the vehicles allotted to the zonal officers.

Scanned with OKEN Scanner

**தினகரன்** 01 FEB 2025

# ஈரோட்டில் பறக்கும் படை சோதனையை ஆய்வு செய்த தேர்தல் நடத்தும் அலுவலர்

ஈரோடு,பிப்.1:தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்டு வரும் வாகனச்சோதனை பணிகள் குறித்து, தேர்தல் நடத்தும் அலுவலர் நேற்று ஆய்வு செய்தார்.

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத் தேர்தலையொட்டி கடந்த ஜனவரி 7ம் தேதி முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு பகுதியாக தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு நிலைக்குழுவினர் என 30 பேர் கொண்ட குழுவினர் 24 மணி நேரமும், சுழற்சி முறையில் வாகனத் தணிக்கை மேற்கொண்டு வருகின்றனர். அப்போது, ரூ.50 ஆயிரத்துக்கும் மேலாக உரிய ஆவணங்களின்றி எடுத்து வரப்படும் தொகைகள் பறிமுதல் செய்யப்பட்டு தேர்தல் கட்டுப்பாட்டு அலுவலகம் மூலமாக மாவட்ட கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

மது உள்ளிட்ட போதை வஸ்துகள், புடவைகள் உள்ளிட்ட ஆடைகள், இதர வீட்டு உபயோகப் பொருட்கள் என எடுத்து வரப்படும் அனைத்து வகை பொருட்களும் உரிய ஆவணங்களின் அடிப்படையிலேயே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. தகுந்த ஆவணங்களில்லாத பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், தேர்தல் பறக்கும் படையினர் மற்றும் கண்காணிப்பு நிலைக் குழுவினர் ஈரோடு கிழக்குத் தொகுதிக்குள் மேற்கொண்டு வரும் பணிகளை கிழக்குத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான ஸ்ரீகாந்த் நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தொடர்ந்து ஈரோடு கருங்கல்பாளையம் செக்போஸ்ட் பகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் மேற்கொண்டு வரும் வாகனத் தணிக்கைப் பணிகளை ஆய்வு செய்தார்.

அப்போது, உரிய விதிமுறைகளின் செயல்பட அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். இந்த ஆய்வின்போது தேர்தல் கட்டுப்பாட்டு அதிகாரி ஆனந்த் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

Erode East Assembly Constituency By-election.
The Election Returning Officer inspects the flying squad checking.

Scanned with OKEN Scanner

தினகரன்

0 1 FEB 2025

## ஈரோடு இடைத்தேர்தலுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் கருவிகள் பாதுகாப்பு அறையில் வைத்து சீல் வைப்பு

ஈரோடு,பிப்.1: ஈரோடு இடைத்தேர்தலுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் சின்னம் பொருத்தும் கருவிகள் கலெக்டர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையில் வைத்து சீல் வைக்கப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு வருகிற 5ம் தேதி நடைபெற உள்ளது.

இந்த தொகுதியில் உள்ள 237 வாக்குச்சாவடிகளில் பயன்படுத்த 850 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவிபேட் ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த இயந்திரங்களில் கடந்த 29ம் தேதி முதல் நேற்று முன்தினம் வரை வாக்காளர் பெயர்-சின்னம் பொருத்தும் பணி நடந்தது. அந்த இயந்திரங்கள் அனைத்தும், மாநகராட்சி அலுவலக பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டது.

முன்னதாக, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் 'சின்னம் பொருத்தும் கருவி' மூலம் 'பேலட் ஷீட்' விபரங்களை பதிவேற்றம் செய்தனர்.

இந்த பதிவேற்றத்தால், வாக்காளர் பதிவிடும் சின்னம், வி.வி.பேடில் பிரிண்ட் ஆகி வெளிவரும். இப்பணிகள் நிறைவு பெற்று, சின்னம் பொருத்தும் கருவியை பாதுகாப்பாக எடுத்துச்சென்று, கலெக்டர் அலுவலக பாதுகாப்பு அறையில், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா வைத்து, சீல் வைத்தார். இந்நிகழ்வின்போது, கலெக்டரின் நேர்முக உதவியாளர்(பொது) முகமது குதுரத்துல்லா, தேர்தல் பிரிவு தாசில்தார் சிவசங்கர், வேட்பாளர்கள், அவர்களது முகவர்கள் உடனிருந்தனர்.



▶ ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலையொட்டி சின்னங்கள் பொருத்தும் பணி முடிவடைந்த நிலையில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களை வேட்பாளர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா அறையில் வைத்து சீல் வைத்தார்.

The machine for fixing the symbol in the EVMs kept in the strong room and sealed.

Scanned with OKEN Scanner

தினகரன் 01 FEB 2025

# வாக்குச்சாவடி நுண் பார்வையாளர்கள், வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு பயிற்சி



ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் ஈரோடு கிழக்கு தொகுதி வாக்குச்சாவடி கண்காணிப்பாளராக நியமிக்கப்பட்ட நுண் பார்வையாளர்களுக்கு பயிற்சி நடந்தது. இதில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா, தேர்தல் பொது பார்வையாளர் அஜய் குமார் குப்தா மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

ஈரோடு,பிப்.1: ஈரோடு இடைத்தேர்தல் வாக்குச்சாவடிகளை கண்காணிக்கும் நுண் பார்வையாளர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு முன்னேற்பாடு பணிகள் குறித்து பயிற்சி கூட்டம் நடைபெற்றது.

ஈரோடு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் தொடர்பாக 237 வாக்குச்சாவடிகளை கண்காணிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள எல்ஐசி, ரயில்வே, தேசியமயமாக்கப்பட்ட வங்கி அலுவலர்கள்,இதர மத்திய அரசு பணியாளர்கள் என 284 தேர்தல் நுண் பார்வையாளர்களுக்கான பயிற்சி கூட்டம் நேற்று நடைபெற்றது.

கூட்டத்திற்கு கலெக்டர் ராஜகோபால் சுன்கரா தலைமை தாங்கினார். பொது தேர்தல் பார்வையாளர் அஜய்குமார் குப்தா முன்னிலை வகித்தார். இதில், வாக்குச்சாவடியில் வருகிற 5ம் தேதி வாக்குப்பதிவு துவங்கும் முன் செய்ய வேண்டிய முன்னேற்பாடு பணிகள் குறித்தும், விதிமீறல்கள் நடைபெறும் பட்சத்தில் தேர்தல் பொது பார்வையாளருக்கு உடன் தகவல் தெரிவிக்க வேண்டும் என்பது பற்றி பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும், வாக்கு எண்ணிக்கை நடக்கும் 8ம் தேதி,அப்பணியில் ஈடுபட உள்ள 17 கண்காணிப்பாளர்கள், 17 உதவியாளர்கள், 17 நுண் பார்வையாளர்கள் என 51 அலுவலர்களுக்கு வாக்கு எண்ணிக்கை தினத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து கலெக்டர் தலைமையில் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்த கூட்டத்தில், கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்த், உதவி கலெக்டர்(பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, உதவி திட்ட அலுவலர் மகேஸ்வரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Training for the micro observers.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 01 FEB 2025

## மறியலுக்கு பின் அனுமதி

நாம் தமிழர் கட்சி வேட்பாளர் சீதாலட்சுமிக்காக, திருநகர் காலனியில் பொதுக்கூட்டம் நடத்த, தேர்தல் பிரிவு அதிகாரிகளின் வாய்மொழி உத்தரவுப்படி நேற்று மேடை அமைக்க முயன்றனர். ஆனால் அனுமதி வழங்கவில்லை எனக்கூறி போலீசார் தடுத்து, முனிசிபல் சத்திரத்தில் அனுமதி வழங்கினர். மாலை, 5.40 மணிக்கு அவ்விடத்தில் மேடை அமைக்க முயன்றபோது, அங்கு வந்த போலீசார், 'இங்கும் அனுமதி இல்லை' என்றனர். இதனால் ஆத்திரமடைந்த நா.த.க.,வினர், வேட்பாளர் சீதாலட்சுமி முன்னிலையில் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால் போலீசார் பேச்சுவார்த்தை நடத்தி அனுமதி வழங்கினர்.

Permission granted after strike.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 01 FEB 2025

# போலீஸ் மீது நா.த.க., புகார்

தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்திடம், நா.த.க., முதன்மை முகவர் நவநீதன் மற்றும் நிர்வாகிகள் புகார் மனு வழங்கி கூறியதாவது: இடைத் தேர்தலில், 31ம் இரவு, 7:00 மணி முதல், 10:00 மணி வரை திரு நகர் காலனியில் பொதுக்கூட்டம் நடத்த, அனுமதி வழங்க கேட்டு விண்ணப்பித்து இருந்தோம். அனுமதி வழங்குவதாகவும், சி.ஐ.எஸ்.எப்., காவலர்கள் பாது காப்பு வழங்குவதாகவும் உறுதியளித்து அனுமதித்தீர்கள். ஆனால் அவ்விடத்தில் மேடை அமைக்கும் பணி நடந்தபோது, கருங்கல்பாளையம் போலீசார் வந்து, 'இங்கு கூட்டம் நடத்த அனுமதி இல்லை. மேடை அமைக்கக்கூடாது. கூட்டம் நடத்தினால் தி.மு.க.,வினர் பிரச்னை செய்வார்கள்' எனக்கூறி, வாய் மொழியாக கூறி மிரட்டினர். தேர்தலில் போலீசார் ஒரு தலைப் பட்சமாக நடந்து கொள்கின்றனர். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு புகாரில் தெரிவித்துள்ளனர்.

NTK complains against police.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 01 FEB 2025


# சீமான் விதிமீறல் பேச்சு புகார் – வழக்குகள் பதிவு

தேர்தல் நடத்தை விதிகளுக்கு மாறாக, பேசி வரும் சீமான் மீது நடவடிக்கை கோரி, தேர்தல் நடத்தும் அலுவலர் ஸ்ரீகாந்திடம், திராவிடர் இய்க்க தமிழர் பேரவை பொது செயலாளர் சிற்பி செல்வராஜ் நேற்று மனு வழங்கினார். அதன் விபரம்: இடைத்தேர்தல் பரப்புரை, செய்தியாளர் சந்திப்பில் பொய்யான, அவதூறான, வன்முறையை விதைக்கும், பிரிவினைவாத, வெறுப்பு அரசியலை சீமான் பேசி வருகிறார். கடந்த, 28ல் அசோகபுரம், நெரிக்கல்மேடு பகுதி பிரசாரத்தில், 'வெடிகுண்டு வீசி விடுவேன்; உங்களை புதைக்கிற இடத்தில் கூட புல் முளைக்காது' என பேசியுள்ளார். இதுபற்றி விசாரித்து, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு மனுவில் தெரிவித்துள்ளார். இதேபோல் சீமான் மீது, பெரியார், அம்பேத்கர் கூட்டமைப்பினர், தேர்தல் நடத்தும் அலுவலரிடம் மனு வழங்கினர். இதன் அடிப்படையில் விசாரித்த கருங்கல்பாளையம் போலீசார், 'சீமான் மீது கலவரத்தை துாண்டும் வகையில் பேசுவது, பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பேசுவது, மிரட்டல் விடுத்தது' என மூன்று பிரிவுகளில் வழக்குப்பதிவு செதுள்ளனர்.

A case filed on Seeman for speaking to incite riots.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 01 FEB 2025




■ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிரசாரம் எப்படி போகிறது? என்பதற்கு இந்தப்படம் உதாரணம். தேர்தல் நடத்தும் மாநகராட்சி அலுவலகம் தேர்தல் நெருங்கும் நிலையில் நேற்று பரபரப்பின்றி அமைதியாக காணப்பட, அங்கு உலாவச்சென்ற இந்த ஜீவனும் ஆழ்ந்து உறங்கி விட்டது.

Erode East Assembly Constituency By-election.
Deserted view of the Erode Corporation Office.

Scanned with OKEN Scanner

**காலைக்கதிர்** 01 FEB 2025

# ஓட்டுப்பதிவு இயந்திரங்களுடன் செல்லும் 24 ஜீப்களில் ஜி.பி.எஸ்., கருவி பொருத்தம்

**ஈரோடு, பிப். 1–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் ஓட்டுப்பதிவு நடக்கும், 237 ஓட்டுச்சாவடிகளுக்கு, மாநகராட்சி அலுவலகத்தில் இருந்து, வரும், 4ம் தேதி காலை முதல் மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், கட்டுப்பாட்டு இயந்திரங்கள், வி.வி.பேட் மற்றும் ஓட்டுச்சாவடி பயன்பாட்டு பொருட்கள் வாகனங்களில் எடுத்து செல்ல உள்ளனர். இதற்காக கூரை அமைக்கப்பட்ட, 24 லாரிகள், பெரிய லாரி வடிவ வேன்களை வாடகைக்கு அமர்த்தி உள்ளனர். இந்த வாகனங்களுடன் மண்டல அலுவலர், பாதுகாவலர்கள் செல்வதற்காக தேர்தல் ஆணைய உத்தரவுப்படி, 24 ஜீப்கள் தயார் செய்துள்ளனர். மாநகராட்சி அலுவலகத்தில் இந்த ஜீப்களுக்கு ஜி.பி.எஸ்., கருவி பொருத்தும் பணி நேற்று மாலை நடந்தது.



ஈரோடு இடைத்தேர்தல் ஓட்டுபதிவுக்கான இயந்திரங்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுடன் பயணிக்கும் ஜீப்களுக்கு, ஜி.பி.எஸ்., கருவி பொருத்தப்பட்டது.

இ.வி.எம்., உள்ளிட்ட கருவிகள், பிற ஓட்டுச்சாவடி பொருட்கள் கொண்டு செல்லும் வாகனத்துடன், இந்த இக்கருவி பொருத்தப்பட்ட ஜீப், எங்கு செல்கின்றன என்பதை, மாநகராட்சி அலுவலக தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து கண்காணிக்கலாம்.

தவிர, இந்த வாகனங்களை ஓட்டும் டிரைவர், உடன் செல்லும் அலுவலர்கள், பாதுகாப்புக்கு செல்லும் போலீசார், பிற பணியாளர்கள் போன்றோர் விபரங்களையும் பட்டியலிட்டு அறிவித்துள்ளனர்.

GPS fixed in the 24 jeeps which carries the EVMs.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 0 1 FEB 2025

## சின்னம் பொருத்தும் கருவி பாதுகாப்பு அறையில் 'சீல்'

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் ஓட்டுப்பதிவு, 237 ஓட்டுச்சாவடிகளில் நடக்கிறது. இவற்றில் பயன்படுத்த, 850 மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள், 284 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 308 விவிபேட் ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த, 29, 30ல் இ.வி.எம்.,களில் 'பேலட் ஷீட்' பொருத்தும் பணி நடந்தது.

இதையடுத்து இ.வி.எம்.,களில் 'சின்னம் பொருத்தும் கருவி' மூலம் 'பேலட் ஷீட்' விபரங்களை நேற்று பதிவேற்றம் செய்தனர். பணி நிறைவு பெற்று, சின்னம் பொருத்தும் கருவியை பாதுகாப்பாக எடுத்து சென்று, கலெக்டர் அலுவலக பாதுகாப்பு அறையில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா முன்னிலையில் வைத்து, 'சீல்' வைத்தனர்.

The machine for fixing the symbol in the EVMs kept in the strong room and sealed.

Scanned with OKEN Scanner

தினமணி 01 FEB 2025

# கலவரத்தை 'தூண்டும்' வகையில் பேசியதாக சீமான் மீது வழக்குப் பதிவு

ஈரோடு, ஜன.31: கலவரத்தை தூண்டும் வகையில் பேசியதாக சீமான் மீது



மூன்று பிரிவுகளின்கீழ் கருங்கல்பாளையம் போலீஸார் வெள்ளிக்கிழமை வழக்குப் பதிவு செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மா.கி.சீதாலட்சுமியை ஆதரித்து ஈரோடு அருகே நெரிக்கல்மேட்டில் கடந்த 28-ஆம் தேதி இரவு பிரசார பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் பேசிய நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், பெரியார் ஈவெரா குறித்து விமர்சித்தபோது, தான் வெடிகுண்டு வீசுவேன் என பேசியிருந்தார். இதற்கு பெரியார் அம்பேத்கர் கூட்டமைப்பினர், தெற்கு மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் கண்டனம் தெரிவித்து ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் புகார் மனு அளித்தனர்.

இந்நிலையில், சீமான் மீது கலவரத்தை தூண்டும் வகையில் பேசியது, பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் பேசியது உள்ளிட்ட மூன்று பிரிவுகளின் கீழ் கருங்கல்பாளையம் போலீஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

சீமான் ஈரோடு கிழக்கு தொகுதியில் கடந்த 24-ஆம் தேதி முதல் பிரசாரம் செய்து வருகிறார். இதில் அனுமதிக்கப்பட்ட நேரத்தை விட அதிகநேரம் பிரசாரம் மேற்கொண்டது, அனுமதிக்கப்பட்ட இடத்தில் பிரசாரம் செய்யாமல் வேறு இடத்தில் பிரசாரம் செய்தது என தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக 30-ஆம் தேதி வரை 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது தவிர நெரிக்கல்மேடு பகுதியில் கலவரத்தை தூண்டும் வகையில் பேசியதாக ஒரு வழக்கு என மொத்தம் இதுவரை அவர் மீது 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக போலீஸ் தரப்பில் தெரிவித்தனர்.

கடந்த 2023-ஆம் ஆண்டு இடைத்தேர்தலின்போதும் சீமான் அருந்ததியர் சமூக மக்கள் குறித்து அவதூறாக பேசியதாக கருங்கல்பாளையம் காவல் நிலையத்தில் எஸ்சி, எஸ்டி பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

A case filed on Seeman for speaking to incite riots.

Scanned with OKEN Scanner

தினமணி 01 FEB 2025

### ஈரோடு கிழக்கில் பிரசாரம் பிப்.3–இல் நிறைவு

# நடத்தை விதிகள் என்னென்ன?: தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு

சென்னை, ஜன. 31: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தல் பிரசாரம் வரும் 3-ஆம் தேதி நிறைவடைகிறது. இதை யொட்டி அரசியல் கட்சிகள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

இடைத் தேர்தல் பிரசாரம் வரும் 3-ஆம் தேதி மாலை 6 மணியுடன் நிறைவடைகிறது. அதன்பிறகு ஈரோடு கிழக்கு தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் தேர்தல் தொடர்பான பொதுக் கூட்டத்தையோ, ஊர்வலத்தையோ நடத்தக் கூடாது. தேர்தல் குறித்து குறுஞ்செய்தி, இணையம் உள்ளிட்ட அனைத்து மின்னணு வடிவிலான தகவல் தொடர்புகள் மூலம் பிரசாரங்களை மேற்கொள்ளக் கூடாது.

**சிறைத்தண்டனை:** பொது மக்களில் எந்தவொரு நபரையும் ஈர்க்கும் வகையில் இசை நிகழ்ச்சி அல்லது பிற கேளிக்கை பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை நடத்தக் கூடாது. இந்த விதிமுறையை மீறினால் 2 ஆண்டுகள் சிறை அல்லது அபராதம் அல்லது இவையிரண்டும் சேர்த்து தண்டனையாக விதிக்கப்படும்.


திருமண மண்டபம், சமுதாயக் கூடம், தங்கும் விடுதிகள், விருந்தினர் இல்லம் ஆகிய இடங்களில் வெளியாட்கள் யாரேனும் தங்கியுள்ளனரா என்பது கண்டறியப்படும். வேட்பாளர்களுக்கு வழங்கப்பட்ட நட்சத்திர பேச்சாளர்கள் உள்ளிட்டோருக்கான அனுமதிகள் வரும் 3-ஆம் தேதி மாலை 6 மணிக்குப் பிறகு செல்லாது.

வாக்காளர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வருவது, வாக்குச் சாவடிகளில் இருந்து அழைத்துச் செல்வதும் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டிய முறைகேடான செயலாகும். இரண்டு நபர்களை மட்டுமே கொண்ட அரசியல் கட்சிகளின் தற்காலிக பிரசார அலுவலகம் வாக்குச் சாவடியில் இருந்து 200 மீட்டர்கள் தொலைவுக்கு வெளியே அமைக்கப்பட வேண்டும். தேவையில்லாத கூட்டத்தை அனுமதிக்கக் கூடாது என்று அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

Erode East Assembly By-election campaign ends on Feb 3. The Chief Election Commissioner informs the Election Code of Conduct to be followed.

Scanned with OKEN Scanner

தமிழ் சுடர் 01 FEB 2025




ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலையொட்டி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் சின்னம் பொருத்தும் கருவினை வேட்பாளர் மற்றும் வேட்பாளர்களின் முகவரி முன்னிலையில் பாதுகாப்பு அறையில் வைத்து மாவட்ட தேர்தல் அலுவலரும் கலெக்டருமான ஆன ராஜகோபால் சமுத்திர முன்னிலையில் சீல் வைக்கப்பட்டது

The machine for fixing the symbol in the EVMs kept in the strong room and sealed.

Scanned with OKEN Scanner

மக்கள் முகம்     0 1 FEB 2025



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025ஐ முன்னிட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் சின்னம் பொருத்தும் கருவியை வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் மாவட்ட ஆட்சியரக முதல் தளத்தில் உள்ள பாதுகாப்பு இருப்பறையில் வைத்து ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா சீலிட்டார்.

The machine for fixing the symbol in the EVMs kept in the strong room and sealed by The Election Officer/Erode District Collector.

Scanned with OKEN Scanner

வணக்கம் இந்தியா

0 1 FEB 2025

## ஈரோடு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் சின்னம் பொருத்தும் கருவியினை இருப்பறையில் வைத்து சீலிட்ட ஆட்சியர்

ஈரோடு பிப்.1



ஈரோடு கிழக்கு சட்ட மன்றத்தொகுதி இடைத்தேர்தல் 2025 ஐ முன்னிட்டு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா, மின்னணு வாக்குப் பதிவு இயந்திரத்தில் சின்னம் பொருத்தும் கருவியினை (Symbol loading unit) வேட்பாளர்கள் மற்றும் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில், மாவட்ட ஆட்சியரக முதல் தளத்தில் உள்ள பாதுகாப்பு இருப்பறையில் வைத்து சீலிட்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தால், 98.ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலுக்கான கால அட்டவணை அறிவிக்கப்பட்டு, எதிர்வரும் பிப்ரவரி 05, 2025 அன்று வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. 98. ஈரோடு கிழக்கு தொகுதியில் வாக்குப்பதிவிற்காக 237 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. 98.ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் 46 வேட்பாளர்கள் களத்தில் உள்ளதால் ரிசர்வ் சேர்த்து 850 மின்னணு வாக்குப்பதிவு அலகு (Ballot Unit), 284 கட்டுப்பாட்டு அலகு (Control Unit) மற்றும் 308 வி.வி.பேட் (VVPAT) ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த 29.01.2025 முதல் 30.01.2025 வரை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் சின்னம் பொருத்தும் பணி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து இன்றைய தினம் (31.01.2025) மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு இருப்பறையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் சின்னம் பொருத்தும் கருவி (Symbol loading unit) வைக்கப்பட்ட பெட்டியினை வைத்து சீலிட்டார். இருப்பறையானது 24 மணி நேரமும் ஆயுதம் ஏந்திய காவலர்கள் மூலம் தொடர்ந்து கண்காணிக்கப்படும்.

இந்த நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முகம்மது குதுரத்துல்லா, வட்டாட்சியர் (தேர்தல்) சிவசங்கர் உட்பட தொடர்புடைய அலுவலர்கள், வேட்பாளர்கள், வேட்பாளர்களின் முகவர்கள் மற்றும் பெல் நிறுவன பொறியாளர் ஆகியோர் உடனிருந்தனர்.

The machine for fixing the symbol in the EVMs kept in the strong room and sealed by The Election Officer/Erode District Collector.

Scanned with OKEN Scanner